# இலக்கணம் - அகர வரிசைப்படி சொற்களைச் சீர் செய்தல்

www.pandianprabu.weebly.com

**விளக்கம் :**
மாறி மாறி கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களை அகராதிப்படி வரிசைப் படுத்துவதே அகர வரிசைப்படி சொற்களை சீர் செய்தல் எனப்படும் .

**உயிரெழுத்துக்களை வரிசைப்படுத்துதல்:**
முதலில் அ,ஆ,இ,ஈ என உயிரெழுத்துக்களை வரிசைப்படுத்த வேண்டும்.
**(எ.கா):**
ஒட்டகம் , இலை, அரும்பு, ஊஞ்சல்
**விடை:**
அரும்பு , இலை , ஊஞ்சல் , ஒட்டகம்

**மெய்யெழுத்துக்களை வரிசைப்படுத்துதல் :**
முதல் எழுத்திற்கு அடுத்த எழுத்து மெய்யெழுத்தாக இருந்தால் அதனை வரிசைப் படுத்தவேண்டும்.
**(எ.கா):**
நன்மை, நம்பகம் , நல்லது , நட்சத்திரங்கள்
**விடை:**
நட்சத்திரங்கள், நம்பகம், நல்லது, நன்மை

**உயிர் மெய் எழுத்துக்களை வரிசைப்படுத்துதல் :**
உயிர் மெய் எழுத்துக்களை க,கா,கி,கீ என்றே வரிசைப் படுத்த வேண்டும்.
**குறிப்பாக எக்காரணத்தைக் கொண்டும் க,ங,ச என்ற முறையில் வரிசைப் படுத்தக் கூடாது.**
**(எ.கா):**
மிருகம், முத்து, மௌனம், மதி
**விடை:**
மதி , மிருகம், முத்து , மௌனம்